செந்தமிழ்

தொகுதி :95 திருவள்ளுவர் ஆண்டு 2032 நவம்பர் 2001 பகுதி : 11

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம் • THE MADURAI TAMIL SANGAM •

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி	தலைவர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை	செயலாளர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. மா. சங்கர பாண்டியன்	உறுப்பினர்
திரு. டாக்டா. ந. சேதுராமன்	உறுப்பினர்
திரு. கே. கந்தசாமி	உறுப்பினர்
திரு. வெ. பழனிச்சாமித்தேவர்	உறுப்பினர்
திரு. வே. திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. க.சி. அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. அ. சாமிஐயா	உறுப்பினர்

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

செந்தமிழ்

திங்கள் இதழ்

இதழ் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 60	ரூ. 600
வாணாள் கட்டணம்	ரூ. 500	ரூ. 2000
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	

மதிப்புறு ஆசிரியர் :

இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பொருளடக்கம்

சீவக சிந்தாமணி கூறும் மகளிர் தொழில்கள்
முனைவர் ப.பழனியம்மாள் — 377

தொடக்கக்கல்வியின் தடைக்கற்கள்
சு.கு.பன்னீர் செல்வம் — 389

தமிழ் இலக்கியங்கள் சிற்பங்கள் காட்டும்
சமண சமய இயக்கியர்
முனைவர் வெ.வேதாச்சலம் — 393

ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப் பார்வை - I
அ.மா.பரிமணம் 402

சீவக சிந்தாமணி கூறும் மகளிர் தொழில்கள்

முனைவர் ப.பழனியம்மாள்

முன்னுரை

அழகாலும், அன்பு, அருள் முதலிய பண்புகளாலும் விரும்பத்தக்க தன்மை பெண்மையாகும். "அடக்கம், அமைதி முதலிய நற்பண்புகளும் அப்பண்புக்கேற்ற உடல் வனப்பும் உடையவரே பெண்டிர் எனப் போற்றப் பெறுவர். கண்ணிறைந்த பேரழகினால் உள்ளங்கவரும் நங்கையைக் 'காரிகை' என வழங்குதல் உலகியல். ஆடவர்களால் காதலிக்கத் தகுந்த காதல் மகளிர் 'மாதர்' என வழங்கப் பெற்றனர். ஐம்பொறிகளால் நுகர்தற்கினிய மென்னீர்மை மகளிரின் சிறப்பியல்பாகும். மகளிர்பால் காணப்பெறும் மென்னீர்மையினைச் சாயல் என்பர். சாயலாகிய மென்மையினை இயல்பாகப் பெற்றமையால் 'மெல்லியலார்' என்ற பெயர் மகளிர்க்கு உரியதாயிற்று.[1] கணவருடைய வாழ்க்கைக்குத் துணையாக இருந்து அன்பினால் இணைந்து வாழும் மகளிர் வாழ்க்கைத் துணை எனப் பாராட்டப் பெற்றனர். இல்லத்தில் கணவரையும், குழந்தைகளையும் பேணிக் காக்கின்றனர். விருந்தினரைப் போற்றுகின்றனர். செலவைச் சிறிதாக்கி வரவைப் பெரிதாக்கிக் குடும்ப நலனை வளர்க்கின்றனர். அதனால் மனைக்கு விளக்கம் மடவார் என்று சிறப்பிக்கப்பட்டனர். வினையே ஆடவர்க்கு உயிரெனக் கருதப்பட்டாலும் மகளிரும் தம் மெல்லியல்பிற்கேற்பத் தொழில் செய்வதில் வல்லவர்களாய்த் திகழ்ந்தனர். தம் குடும்ப வளங்கருதி முயற்சியும் உழைப்பும் உடையவராய் வாழ்ந்தனர். மகளிரின் தொழில் திறமைகளைப் பற்றித் திருத்தக்க தேவர் விளக்கியுள்ளார்.

மாட்டு வண்டி ஓட்டுநர்

அரண்மனையிலும் செல்வந்தர் இல்லங்களிலும் ஏவல் மகளிர் பணியாற்றினர். அவர்கள் மாட்டு வண்டி ஓட்டும் தொழிலையும்

செய்தனர். அக்காலத்தில் தேர், சிவிகை, குதிரை வண்டி, மாட்டு வண்டி போன்ற ஊர்திகளைப் போக்குவரத்துச் சாதனங்களாக மக்கள் பயன்படுத்தினர். பெரும்பாலும் இத்தகு ஊர்திகளை ஆடவர்களே ஓட்டினர் எனினும் சுரமஞ்சரியின் இல்லத்தில் மாட்டு வண்டியை ஓட்டும் தொழிலைப் பணிப்பெண் செய்ததாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஆடவரை வெறுத்த சுரமஞ்சரியார் காமன் கோட்டத்திற்குச் சென்று வழிபட விரும்பினாள். வண்டி ஓட்டுநளாகிய பணிப்பெண் வண்டி இழுக்கப் பயன்படும் எருதின் கால்களுக்குச் சதங்கை மணியும், கழுத்திற்குப் பொன் மணியும், கண்ணியும் புனைந்தாள். நெற்றியில் மின்னல் ஒளிவீசும் பட்டமணிந்தாள். பின்னர் நெய்யையும், பாலையும் தெவிட்டும் அளவிற்கு ஊட்டி, எருதை வண்டியில் பூட்டினாள். சாட்டை எனப்படும் கோலைக் கையில் எடுத்து வண்டியில் ஏற, சுரமஞ்சரியும் தன் தோழியுடன் வண்டியில் ஏறி அமர்ந்தாள். (சீவ. 2054) இக் காட்சியை,

"மின்னியற் பாண்டில் பண்ணி
மடந்தை கோல் கொள்ள வைய
மின்னியற் பாவை யேறபத்
தோழியோடு ஏறினாள்" (சீவ 2054 : 3-4)

என்னும் சிந்தாமணிப் பாடல் புலப்படுத்துகிறது. எனவே மடந்தையர் மாட்டு வண்டி ஓட்டுநராகவும் தொழில் செய்து வாழ்ந்தனர் என்பது தெளிவு.

மெய்க்காப்பாளர்

ஏவல் மகளிர் சிலர் வீரம் செறிந்த காவல் மகளிராகவும் பணியாற்றினர். வீணைப் போருக்காகக் காந்தருவதத்தையார் சுயம்வர மண்டபத்திற்குச் சென்றாள். இவளுக்குப் பாதுகாப்பாக மகளிர் அணிவகுத்துச் சென்றனர். அவர்களின் காவல் தொழிலைத் திருத்தகுமாமுனி திறம்படக் கூறியுள்ளார்.

காவல் மகளிர், வட்டமான பனிச்சையர், வாரால் கட்டிய கச்சினர், வெண்பட்டணிந்தவர், பல அம்புகள் நிறைந்த தூணியும் வில்லும் வாளும் சுமந்து கொண்டு ஆயிரத்தெட்டு மகளிர் வஞ்சினம் கூறிச் சென்றனர் (சீவ 632) இவர்களுக்குப் பின்னர் மார்புக் கச்சையை இறுகக் கட்டி, ஆணுடை அணிந்து, அம்பினும் கடிது செல்பவராய், புதிய பொற் கேடகத்தையும் வாளையும் பற்றிய காவல் மகளிர் தொடர்ந்து சென்றனர். (சீவ 633) இத்தகு பெண்படையினர் சூழக் காந்தருவதத்தையார் பாதுகாப்போடு செல்லும் பொழுது இருபுறமும் பொது மக்கள் காந்தருவதத்தையாரைக் காணும் வேட்கையில் நெருங்கினர். அப்பொழுது அரசனின் ஆணை! ஆணை!! நீவிர் விலகிச் செல்லுமின் என்று கூறி, நெருங்கிய மக்கள் கூட்டத்தை மூங்கில் கோலால் பெண் காவலர் தடுத்தனர். (சீவ 634) வாளேந்திய பெண் படையினரின் செயலை,

> ஆணை! ஆணை! அகலுமின் என
> வேணுக் கோலின் மிடைந்தவர் ஒற்றினர்
>
> (சீவ 634 : 1-2)

என்று திருத்தக்க தேவர் பாடியுள்ளார். இவ்வாறு கேடகத்தையும், வாளையும், மூங்கிற் கோலையும் ஏந்திப் பெண் காவலர் சிறப்பாகப் பணியாற்றினர். இக்காலச் சமுதாயத்தில் பெண் காவலர் நிலையங்கள் பல தோன்றுவதற்கு முதன் முதலாக வித்திட்டவர் திருத்தக்க தேவர் எனில் அது மிகையாகாது.

மருத்துவச் செவிலியர்

காப்பியத் தலைவன் சீவகனின் தோழர் படையினர் பல போர்களைச் செய்தனர். வெற்றியோடு விழுப்புண்களையும் பெற்றுத் திரும்பினர். அவர்களின் ஆறாப்புண்களை ஆற்றுவதற்கு மருத்துவ மகளிர் உதவினர். இவர்களை, திருத்தகு மாமுனி 'நல்லார்' (சீவ 819) என்று போற்றுகின்றார். விழுப்புண் பட்ட வீரர்களை மருத்துவ மகளிர்

உடனிருந்து கவனித்தனர். படைகிழித்த புண்களில் நெய்தோய்த்த துணியை வைத்தனர். வேல் புகுந்த இடத்தை ஆராய்ந்து கத்தியால் அறுத்தெடுத்தனர். (சீவ 818 :1-2) முது மரத்தில் காணப்படும் பொந்து போல் மெய்யெல்லாம் குழிப்புண்ணுற்ற வீரர்களுக்கு நெய் கலந்த மருந்துகளைப் புண்களில் கவளம் கவளமாக வைத்தனர். மார்பில் நெய்த்துணியைப் பொருந்த வைத்து அதற்கு மேல் எலிமயிரால் நெய்யப்பட்டு, உள்ளே துணி பொருந்திய கம்பளிச் சட்டையைப் புண்ணில் தூசி முதலியன படாதவாறு அணிவித்தனர். இச்சட்டையை ஆசிரியர்

'நுதி மயிர்த் துகில் குப்பாயம்' (சீவ 819: 4)

என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு பாசறையில் மருத்துவப் பணியாற்றிய மகளிரின் செயல் திறனை,

"முதுமரப் பொந்து போல
முழுமெயும் புண்கள் உற்றார்க்கு
இது மருந்தென்ன நல்லார்
இழுதுசேர் கவளம் வைத்துப்
பதுமுகன் பரவை மார்பில்
நெய்க்கிழி பயிலச் சேர்த்து
(சீவ 819)

என்னும் பாடல் வெளிப்படுத்துகிறது. மகளிர் அறுவைச் சிகிச்சையும் செய்தனர் என்பதற்கு,

"புக்குழி எஃகாம் நாடி இரும்பினால் போழப்பட்டார்"
(சீவ 818:2)

என்னும் பாடலடி சான்று பகர்கின்றது. இதனால் பாசறையில் பணியாற்றிய மகளிர் அறுவை மருத்துவம் செய்தனர் என்று அறியலாம்.

தூதுவர் :

அரசியல் பணிகளுள் ஒன்று தூதுத் தொழில். இத் தொழிலைத் தொன்மைக் காலத்திலிருந்தே மக்கள் மேற் கொண்டனர் என்பதை,

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன"[2]

என்ற நூற்பா புலப்படுத்துகிறது. மகாபாரதத்தில் கண்ணன் தூது, இராமாயணத்தில் அனுமன் தூது, அங்கதன் தூது, பெரிய புராணத்தில் சுந்தரரின் காதலுக்காகச் சென்ற இறைவன் தூது ஆகிய தூதுச் செய்திகளின் அடிப்படையில் பிற்காலத்தில் தூது என்னும் சிற்றிலக்கிய வகையும் தோன்றியது. இதனை அகத்தூது, புறத்தூது என்று வேறுபடுத்திக் கூறவும் இயலும். அதியமானுக்காக ஔவையார் தூது சென்ற செய்தியை

'இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டி'[3]

எனத் தொடங்கும் புறப்பாடல் அறிவிக்கின்றது. சிந்தாமணிக் காலத்தில் வாழ்ந்த மகளிர் அகத்தூதுவராகவும், புறத்தூதுவராகவும் பணியாற்றி உள்ளனர்.

அகத் தூதுவர் :

தலைவன் தலைவியரின் காதல் நிறைவேறுவதற்காகத் தூது செல்வது அகத்தூது எனப்படும். தன் தலைவியின் காதலுக்காக அக வாயில்கள் தூது செல்வதும் உண்டு. கனகமாலையாரின் காதலுக்காக அநங்க விலாசினி என்னும் தோழி சீவகனிடம் தூதாகச் சென்றாள். காமத்தீயினால் வருந்திய கனகமாலையார் மணிச் செப்பினுள்ளிருந்த மாலையை எடுத்துக் கொடுத்துச் சீவகனிடம் கொடுக்குமாறு தன் தோழியைத் தூதாக அனுப்பியதாகச் சிந்தாமணி குறிப்பிடுகின்றது. கனகமாலையாரிடமிருந்து மாலையைப் பெற்றுக் கொண்ட தோழி, தன் தலைவியை வணங்கிச் சென்றாள். இதனை,

"......................... தன் மணிச் செப்பினுள்
மன்னுமாலை கொடுத்தவனுக்கு
உய்த்து ஈயெனத் தொழுது கொண்டு
அன்னமென்ன ஒதுங்கிச்
சிலம்பரற்றச் சென்றாள்" (சீவ. 1667)

என்னும் பாடல் விளக்குகின்றது. சென்றவள் சீவகனை அண்மினாள். அவன் முன்னர் நின்று அங்கை குவித்து வணங்கிப் பிணையலை நீட்டினாள். சீவகன் அதனை வாங்காமல் அவள் முகத்தைப் பார்த்தான். அதற்கு அவள், என் தலைவிக்கு மாலை கொடுப்பவனும் நீயே, அவளுடைய தோள் மெலிவுக்கு மருந்தும் நீயே, அவளுடைய ஆருயிரும் நீயே, ஆதலின் இதனை வாங்கிக் கொள்க. (சீவ. 1668) என்று கூறி மாலையைச் சீவகனிடம் கொடுத்தாள். இம்மாலையை ஏற்றுக் கொள்ளாவிடில் தன் தலைவி வருந்துவாள் எனக்கூறி அவனை ஏற்றுக் கொள்ளுமாறும் செய்தாள். (சீவ. 1668)

இதனால் அகத்தூதுவராகச் சென்ற அநங்கவிலாசினி அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை, பணிவு ஆகிய நற்பண்புடையவள் என்பது தெளிவு.

புறத்தூதுவர் :

மன்னன் கட்டியங்காரனின் அரண்மனையில் பணியாற்றிய பெண் நாகமாலை. சீவகனைக் கொல்வதற்காகக் கட்டியங்காரன் சூழ்ச்சி செய்தான். இதனை அறிந்த நாகமாலை கட்டியங்காரனின் சூழ்ச்சிச் செயலை எழுதி அதைப் பணிப் பெண்ணிடம் கொடுத்தனுப்பினாள்.

தூதுவளாகச் சென்ற பணிப்பெண் சீவகனுடைய இல்லத்தை அடைந்தாள். அப்பெண் தன் கூந்தலில் சூடியிருந்த பசிய இதழ்களை உடைய குவளை மலர் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள். அதனை, சீவகனின் தந்தை கந்துக்கடன் கூந்தலில் சூடிய பூவென்று இகழாமல்

வாங்கிக் கொண்டான் (சீவ 668) நாகமாலை என்பவளால் அனுப்பப் பெற்ற மலரில் பொருளிருக்கும் என்னும் கருத்தில் படிக்கத் தொடங்கினான். அதில்,

"கட்டியங்காரன் நஞ்சுண்ட கடவுள் போல வெம்பினான். நம்பியைச் செகுத்திட வேண்டும் என்று என்னிடம் கூறவும் செய்தான். இனி நம்பியை நகரினின்றும் நீக்கிக் காவலான ஓரிடத்தில் இருக்கச் செய்க" (சீவ 670)

என்று எழுதி இருந்தது. செய்தியைப் படித்த கந்துக்கடன் தூதுவளாக வந்த பணிப்பெண்ணுக்குக் குழையும் முத்தும் நல்கினான்.

தூதுவளாக வந்த பணிப்பெண் அரண்மனையில் பணியாற்றுபவளே ஆயினும் மன்னன் கட்டியங்காரன் தனக்குப் பகையாகக் கருதும் சீவகனுடைய இல்லத்திற்கு அஞ்சாது, தயங்காது சென்றாள். கூறவந்த செய்தியைக் கூந்தலில் சுமந்து வந்தாள். இதனால் தூதுப்பெண்ணின் வினைத்திட்பம், அஞ்சாமை, சூழ்ச்சி ஆகிய நற்பண்புகள் புலப்படுகின்றன.

அவல் இடித்த மகளிர் :

ஆலைகள் வருவதற்கு முன் மகளிர் நெல்லை உரலில் இட்டு உலக்கையால் குற்றினர். நெல் குற்றுதல் மகளிர் செய்யும் வீட்டுப் பணிகளுள் ஒன்றாகும். நெல்லைப் போலவே பிற தானியங்களையும் உரலில் இட்டுக் குற்றினர். உரலும் உலக்கையும் குற்றுவதற்கும் இடிப்பதற்கும் பயன்பட்டன. மரங்கள் செறிந்த சோலை நிழலில் மகளிர் உலக்கையால் புதிய அவலை இடித்தனர். அவர்கள் உலக்கை தூக்கும் உயரத்தை ஆசிரியர்,

"பாசவல் இடிப்பவர் உலக்கை வாழைப்பல் பழம்
ஆசினி வருக்கை மா தடிந்து"

(சீவ 68 : 1-2)

என்று குறிப்பிடுகின்றார். உலக்கை கொண்டு குற்றும் மகளிரை நல்லவர் என்றும் பாராட்டுகின்றார். இதனை,

"நலத்தகு நானநின்று இடிக்கும் நல்லவர்
உலக்கையால் உதிர்ந்தன தெங்கின் ஒண்பழம்"
(சீவ 92: 1-2)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. உலக்கையானது மா, வாழை ஆகிய பழங்களை உதிர்த்து, தாழை மலரையும் சண்பக மலரையும் தடவும் என்று கூறுவதன் மூலம் மகளிரின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றார். இவ்வாறு மகளிர் நிழலில் நின்று நெல் குற்றுவதை,

"நீழல் முன்றில் நிலவுரற் பெய்து
குறுங்கால் உலக்கை ஓச்சி"[4]

என்று சங்கப் புலவரும் சிறப்பிக்கின்றார். உலக்கை கொண்டு நெல் குற்றி உணவு படைத்துத் தம் குடும்பத்தினருக்கு அமுதளிக்கும் அன்னையின் அன்பையும் ஆற்றலையும் ஆசிரியர் அவல் இடித்தல் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஆடை வெளுத்த மகளிர்

நாகரிக மக்கள் தூய்மையான ஆடைகளை அணிந்தனர். இதற்குத் துணை செய்தவர் ஆடை வெளுக்கும் தொழில் செய்த மகளிர் ஆவர். இப்பெண்கள் ஆடைகளை அழுக்கு நீங்க வெளுத்தனர். துவைத்த துணிகளுக்குச் சோற்றுக் கஞ்சியிட்டு உலர்த்தினர். இவர்கள் தொழில் செய்த பான்மையை,

"பசைவிரல் புலைத்தி நெடிது பிசைந்தூட்டிய
பூந்துகில்"[5]

என்னும் பாடலடி விளக்குகிறது. இதனால் தூய்மையான ஆடையை நாகரிகமாக அணியும் பழக்கம் தொன்று தொட்டு மக்களிடையே

நிலவியிருந்தது எனத் தெரிகிறது. இப்பழக்கம் சிந்தாமணிக் காலத்திலும் இருந்தது. வெளுத்த ஆடைக்குப் போடப்படும் கஞ்சியை, திருத்தக்க தேவர் காடி, களி என்னும் சொற்களால் குறிப்பிடுகின்றார். மங்கையர் கூந்தலையும் கஞ்சி உண்ட பூந்துகிலையும் அகிற்புகையூட்டி உலர்த்தினர். இதற்கு,

"காடியுண்ட பூந்துகில் கழும ஊட்டும் பூம்புகை" (சீவ 71:1)

"களிசெய் கோசிகம்" (சீவ 1673 :1)

என்னும் பாடலடிகள் சான்று பகர்கின்றன. பருத்தி, பட்டு போன்ற ஆடைகளை அழுக்கி நீக்கி வெளுத்துக் கஞ்சியில் தோய்த்து அகிற்புகையில் உலர்த்திய ஆடைகளை அணியும் நாகரித்தைச் சிந்தாமணிக் காலத்து மக்கள் பெற்றிருந்தனர் என்பதும் தெளிவாகின்றது.

நீராடச் சுண்ணப் பொடி தயாரித்த மகளிர் :

"சுண்ணம் என்பது நவமணிகளும், பொன்னும், சந்தனமும் கருப்பூரமும் போன்றவற்றைப் புனுகிலும் பனிநீரிலும் நனைய வைத்து இடிக்கப்படுவதாகும். இங்ஙனம் இடிக்க வேண்டுதலின் பலர் சேர்ந்து இச்சுண்ணம் தயாரிப்பர்"[6] சுண்ணம் மிகத் தூய்மையாகத் தாது போன்று இருக்கும் என்பதை,

"பலர் தொகுபு இடித்த தாதுகு சுண்ணத்தார்"[7]

என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது. இக் கருத்திற்கு அரணாகப் புனுகில் நனைய வைத்து இடிக்கப்படும் சுண்ணம் பற்றித் திருத்தக்க தேவர்.

"நலத்தகு நானம் நின்று இடிக்கும்" (சீவ 92)

என்று குறிப்பிடுகின்றார். "நானம் என்பது புனுகு, இதன் பெயர் இதனில் நனைந்து இடிக்கும் சுண்ணத்திற்கு ஆயினமையின் சினையாகு பெயர்" என்று (சீவ 56 உரை) உரையாசிரியர்

விளக்கமளித்துள்ளார். இச்சுண்ணம் மகளிர் நீராடப் பயன்பட்டது. வாசனை மிகுந்த சுண்ணத்தைத் தயாரிப்பதில் மகளிர் சிறந்திருந்தனர். கோடை காலத்தில் மகளிர் சுண்ணப் பொடியைத் தயாரித்தனர். குளிர் காலத்தில் தயாரிக்கப்பட்ட சுண்ணம் சிறந்த சுண்ணமாகக் கருதப்படவில்லை. மகளிர் தயாரித்த சுண்ணத்தை அஃறிணை உயிர்களாகிய சுரும்பு, வண்டு, தேன், மிஞிறு ஆகிய உயிரினங்களும் விரும்பி நுகர்ந்தன. (*சீவ* 894)

ஒப்பனை மகளிர் :

மங்கல விழாக்களில் மகளிரை அழகுத் தோற்றத்துடன் அலங்கரிப்பதற்கு ஒப்பனை மகளிர் பலர் இருந்தனர். அவர்களுள் விலாசினி என்பவளும் அலங்காரமாலை என்பவளும் ஒப்பற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். திருமண நாளன்று இலக்கணையாரை அலங்காரம் செய்வதற்கு ஒப்பனை மகளிர் இருவரும் வரவழைக்கப்பட்டனர். இவர்களின் ஒப்பனைத்திறனை ஆசிரியர் திறம்படக் கூறியுள்ளார்.

"விலாசினி என்பவள் மணப் பெண்ணாகிய இலக்கணையாரின் கூந்தலுக்கு அகிற்புகை காட்டி, மணங்கமழும் கலவையை ஊட்டிக் கலக்க வாரி, முகத்திற்கு ஏற்ப, ஏற்றின் இமில் போலக் கொண்டையை முடித்தாள். (*சீவ* 1437) அரும்பும் இலையும் இடையிட்டுக் கட்டின முல்லைச் சரத்தைக் கற்பினுக்கு அடையாளமாகச் சூடினாள். முத்து மாலையை உமிழும் மகர வாயான பணியை உச்சியில் அணிந்தாள். நெற்றியில் மணிச் சுண்ணத்தால் செய்த திலகத்தை வைத்தாள். வாட் கண்ணை மையினால் புனைந்தாள். மகரக் குழையை நீக்கிவிட்டு ஒப்பற்ற மணியிலான குதம்பையைக் காதில் சேர்த்தாள்" (*சீ* 2440) முன் கையில் சங்கு வளையல்கள் அணிந்து,. விரல்களில் மணி மோதிரம் மின்னின. தோளிலும் கழுத்திலும் அணிந்த முத்துக்கள் நிலவை நகைத்தன. (*சீவ* 2441) இடை வருந்துமாறு பூணும் பொன்ஞாணும், முத்துவடமும் புரள அணிவித்தாள். மேகலை

அணிந்து இடையில் பட்டினை உடுத்தாள். அடியில் கிண்கிணி சிலம்ப, விரல்களில் அணிவன அணிந்து, சேலையின் முன்றானையைத் தாழ விட்டாள். இவ்வாறு விலாசினை ஒப்பனையை முடித்தவுடன், அலங்காரமாலையும் ஒப்பனை செய்யத் தொடங்கினாள் (சீவ 2445) இவள் இலக்கணையாரின் மலரடி, கை, வாய், நுதல், நா ஆகிய உறுப்புகளுக்குச் செந்நிறம் ஊட்டினாள். (சீவ 2446)

இவ்வாறு திருத்தக்க தேவர் காட்டும் சமுதாயத்தில் வாழ்ந்த பணி மகளிர் அன்றாடம் அழகு செய்யும் தொழிலைச் செய்து வாழ்க்கை நடத்தினர். இன்றைக்கு நகரங்களில் வாழும் மகளிர் பலர் அழகு நிலையங்கள் நடத்துவதற்குத் திருத்தக்க தேவர் வழிகாட்டியுள்ளார் எனலாம்.

கழைக் கூத்தாடும் மகளிர் :

தொன்மைக் காலத்திலிருந்து தாம் கற்ற கலையைத் தொழிலாகக் கொண்டு வாழும் மகளிர் இருந்தனர். தம் உள்ளக்குறிப்புப் புறத்தே வெளிப்படுமாறு ஆடும் மகளிர் வாழ்ந்தனர். அவர்கள் கழைக் கூத்தியர் என்று அழைக்கப்பட்டனர். கிராமப் புறங்களில் வாழ்ந்த மக்களும் குழந்தைகளும் பொழுது போக்கிற்காகக் கழைக் கூத்தினைக் கண்டு களித்தனர். பாடலுக்கேற்ப ஆடியதால் ஆடற்கூத்தியர் என்றும் அழைக்கப்பட்டனர். ஊர்களில் விழாக் காலத்தில் இசைக்கருவிகள் மிகுதியாக ஒலிக்க ஆடுமகள் கயிற்றில் ஏறி ஆடினாள், இதனை,

> "சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
> அரிக்கூட் டின்னியங் கறங்க ஆடுமகள்
> கயிறூர் பாணி"[8]

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. இவ்வாறு கயிற்றிலும் கழையிலும் நின்று வித்தைகள் செய்து மக்களை மகிழ்விக்கும் மகளிர் திருத்தக்க தேவர் காலத்திலும் வாழ்ந்தனர். கழைக் கூத்தி

ஒருத்தி கழையிலிருந்து இறங்கி அருகிலிருந்த கயிற்றில் குதித்தேறிப் பல்கலனும் ஒலிக்க ஆடினாள். இவளுடைய ஆடலை,

> "பாடுகால் கயிற்றில் பாய்ந்து பல்கலனும் ஒலிப்பப் போந்து
> ஆடு கூத்தி ஆடல்" (சீவ 66 : 3-4)

என்று சிந்தாமணிப் பாடல் எடுத்துரைக்கிறது. இவ்வாறு மகளிர் கலையிலும் தேர்ந்தவர்களாய்த் திகழ்ந்தனர்.

முடிவுரை

சீவகசிந்தாமணி பாடப்பட்ட சோழர் காலச் சமுதாயத்தில் வாழ்ந்த மகளிர் பல்வேறு தொழில்களைச் செய்து வறுமையின்றி வளமுடன் வாழ்ந்தனர் என்பது தெளிவாகின்றது.

அடிக்குறிப்புகள்

1. க.வெள்ளைவாரணன், *சங்ககாலத் தமிழ் மக்கள்* ப. 77
2. தொல் பொருள்
3. புறம் 95:1
4. பெரும்பாண், 96 - 97
5. அகம் 387 : 6
6. வி.சி. சசிவல்லி, *பண்டைத் தமிழர் தொழில்கள்*, ப. 144
7. மதுரைக் 399
8. குறிஞ்சிப். 192-194

தொடக்கக் கல்வியின் தடைக் கற்கள்

சு.கு.பன்னீர் செல்வம்

1950-ம் ஆண்டிலிருந்தே தொடக்கக் கல்வி இந்திய அளவிலும் உலக அளவிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் அக்குறிக்கோளை வெகுவிரைவில் அடைந்து விடுவோம் என்பதற்கான எந்த அறிகுறிகளும் இதுவரையிலும் தென்படவில்லை. பெரும்பாலான குழந்தைகட்குத் தொடக்கக் கல்வி கிடைப்பதற்கு வழிவகை காணாமல், மகளிர்க்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்குகிறோம் என்று முழங்குவது வேதனையும் வேடிக்கையும் நிறைந்ததாக இருக்கிறது. பீகார், மத்திய பிரதேசம், உத்திரப் பிரதேசம், இராஜஸ்தான் போன்ற பெரிய மாநிலங்களில் தொடக்கக்கல்வியின் நிலை மிகவும் பரிதாபமான நிலையில் உள்ளது. ஓரிசா மாநிலத்தில் 2.5 மில்லியன் குழந்தைகள் தொடக்கக் கல்வி கூடப் பெற முடியாத நிலையில் கவனிப்பாராற்றுப் பாழாகின்றனர்.

1999ம் ஆண்டு தொடக்கக் கல்வி பற்றி ஆராய்ந்த நிபுணர் குழு ஒருண்மையைப் புலப்படுத்தியது. பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடுவதால் பள்ளிக்கே தம் பிள்ளைகளை அனுப்பவில்லை. அரசு கல்வி நிலையங்களோ தனியார் கல்வி நிறுவனங்களோ ஏழை மக்கட்குக் கல்வி வழங்குவதில் பெரிதும் ஆர்வம் காட்டுவதில்லை! நானி பல்கிவாலா அவர்கள் மிகவும் வருத்தத்தோடு, "சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகளான பின்பும் நம்மில் சரிபாதியினர் கல்வி பெறாமல் இருப்பது மிகப் பெரிய தவறாகும்" என்று கூறுகிறார். வறுமையில் வாடும் குழந்தைகட்குக் கல்வி வழங்குவதில் அரசு, நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர் போதுமான கவனம் செலுத்தவில்லை என்பது கண்கூடு.

அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதில் பெரும் மலைப்பை ஏற்படுத்துவது தேவைப்படும் நிதியின் அளவு. தொடக்கத்தில் 40,000 கோடி என மதிப்பிட்டுப் பின்னர் 80,000 கோடி என மாற்றி மதிப்பிட்டு, தற்போது 1,35,000 கோடி என மதிப்பிட்டுள்ளனர். செயல்படுத்தும் அதிகாரிகள் எப்போதுமே கூடுதலாக மதிப்பிடுவதையே தங்களுக்குப் பாதுகாப்பானது எனக் கருதுவது வழக்கம். அதன் காரணமாகவே இத்தகைய மதிப்பீடுகள்! ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு மாதம் ஒன்றுக்கு அரசு செய்யும் செலவு ரூ.80,000. மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைத்தால் நிதிவளம் பெருகும்!

நமது குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர்.நாராயணன் ஒரு முறை, ''கல்வி வழங்கும் ஏற்பாடுகளில் அங்குமிங்குமாகத் தொடர்பின்மை, செயலின்மை நிலவுகிறது. நிறைவேற்றும் முனைகளில் சட்டென்று நிறுத்தப்படுவதும், திறமையின்மையும் பயன்படாத தன்மையும் மேலோங்கிக் கல்வி வழங்குவதன் அடிப்படைக் கோட்பாட்டையே சீர் குலைத்து விடுகிறது. மெத்தப் படித்தவர்களும், வசதியாக வாழ்பவர்களும், அதிகாரிகளும், பெரும்பாலோர் கல்லாமையில் அழுந்திக் கிடக்கின்றோம் என்ற உறுத்துணர்ச்சியில்லாமல் மரத்துப் போய் வாழ்கின்றனர்'' என்று வேதனையோடு குறிப்பிட்டது மிகவும் உண்மையான கூற்றாகும்.

தொடக்கக் கல்வியைப் பயனுள்ள முறையில் மக்களுக்கு வழங்க வேண்டுமெனில் மிகவும் தீர்மானமான மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். எந்த நிலையிலும் எந்தப் பள்ளியிலும் 'ஆசிரியர் இல்லை' என்ற நிலையைப் போக்க வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற, கற்பிப்பதில் ஆர்வமுடைய ஆசிரியர்களைத் தேவை ஏற்படும் போதெல்லாம் பணியமர்த்த வேண்டும்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர்ந்து முறையாகக் கல்வி கற்க வரும் பிள்ளைகளுக்குப் போதுமான ஆசிரியர்களைப் பணியிலமர்த்தி, கற்பிக்க ஏற்பாடு செய்யாமல், முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி என்று பல்வேறு விளம்பரத் திட்டங்களை அறிமுகப்படுத்தி வீண் செலவு செய்வதை அரசாங்கங்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்தியா முழுவதும் முறைசாராக் கல்வி பெரும்பாலும் விழலுக்கு இரைத்த நீராக இருக்கிறது. ஆகவே உரிய கல்வி நிலையங்களில் போதுமான ஆசிரியர்களை நியமித்துக் கல்வி வழங்க வேண்டும்.

முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி தொடர்ச்சி அறாமலும் மிகவும் பயன் தரக்கூடியதாகவும் விளங்க வேண்டும். பள்ளிக் கல்வி நிறுவனங்கள் மூன்று கட்டங்களில் இருப்பதே சிறப்புடையதாகக் தெரிகின்றது. 5ஆம் வகுப்பு வரை ஒரு கட்டமாகவும், 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை இரண்டாம் கட்டமாகவும், 11 மற்றும் 12ஆம் வகுப்புகள் மூன்றாம் கட்டமாகவும் இருப்பதே சிறப்பதாகும்.

இம்மாதிரி நிர்வாக அமைப்பில் மாறுதல் செய்வதன் மூலம் கல்விப் பணியை எளிதாக்கலாம். இன்னும் பயனுடையதாக ஆக்கலாம். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி 14வயது வரையிலும் எல்லோரும் கல்வி பயில வேண்டும்; எல்லோருக்கும் கல்வி வழங்க வேண்டும். ஆனால் ஆளப்படுவோரும் ஆள்வோரும். இதை நடைமுறைப் படுத்துவதில் ஏனோதானோவென்றுதான் நடந்து கொள்கின்றனர். ஒரு சில குடும்பங்களே வாழ்கின்ற சிற்றூர்களில் 5ஆம் வகுப்புகள் வரை நடத்துவது சாத்தியமல்லாத போது முதலிரண்டு வகுப்புகளை மட்டும் நடத்தலாம். இதனால் நல்ல பயன் விளையும். காமராசர் ஆட்சிக்காலத்தில் தமிழ் நாடெங்கிலும் ஓராசிரியர் பள்ளிகள் ஆயிரக்கணக்கில் தொடங்கப்பட்டன. அதன் விளைவாகத் தமிழ்நாட்டில் பெரும் கல்விப் புரட்சிக்கு வழி வகுக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். திபெத்தில்

ஒன்றாம் வகுப்பு மட்டும் நடத்துகின்ற பள்ளிகள், முதல் இரண்டு வகுப்புகள் மட்டுமே நடத்துகின்ற பள்ளிகள் நிறைய உள்ளன. இதன் பயனாகத் தொடக்கக் கல்வி பெற்று வருகின்றனர். நாமும் அம்முறையைப் பின்பற்றலாம்.

எவ்வளவு இடர்பாடுகள் இருந்தாலும் ஆட்சியாளர்கள் தொடக்கக் கல்வியை மக்களுக்கு வழங்கியே தீர வேண்டும். இப்போதே செய்ய வேண்டும். காலந்தாழ்த்தக் காலமில்லை. ''அச்சமும் அடிமைச் சிறுமதியும் இல்லாத மக்கள் இருக்க வேண்டுமெனில் கல்வி ஒளியேற்ற வேண்டும்'' கல்விக்கண் திறக்க வேண்டும்.

தமிழிலக்கியங்கள் சிற்பங்கள் காட்டும் சமணசமய இயக்கியர்

முனைவர்.வெ.வேதாசலம்

இந்தியநாட்டில் "யக்சி" (YAKSHI) என்று அழைக்கப்பட்ட பெண்தெய்வங்களின் வழிபாடு மிகத்தொன்மையானதாகும். கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே நாட்டுப்புற மக்களிடையே இது பெருஞ்செல்வாக்குடன் விளங்கியது. யக்சியைத் தாய்த்தெய்வமாகவும் வளமைவழிபாட்டின் உருவமாகவும் கருதினர்.[1] நன்மைக்கும் செல்வத்திற்கும் குழந்தைப்பேற்றிற்கும் உடல்நலத்திற்கும் மக்கள் வழிபட்டனர்.[2] பழங்காலத்தில் இந்தியத்தொல்குடியின் ஊர்கள் ஒவ்வொன்றிலும் யக்சி வழிபாடு நடைபெற்றுள்ளது. யக்சியர் காண்போரைக் கவர்ந்திழுக்கும் அழகு படைத்தவராய்,நினைத்தபோது வேண்டும் உருவினை எடுத்துவந்து மக்களுக்கு உதவும் ஆற்றல் படைத்தவராய் இருந்தனர். மக்கள் செல்லும் வழிகளில் இருந்த யக்சியர் பற்றிப் புத்தசாதகக் கதைகள் கூறுகின்றன.[3]

இத்தெய்வங்ளின் செல்வாக்குக் கருதி பௌத்த, சமண, வைதீக சமயங்கள் இவற்றைத் தங்கள் சமயத்துப் பெருந்தெய்வங்களின் காவல் தெய்வங்களாகவும், துணைவியராகவும் ஏற்றுக் கொண்டுள்ளன. இதன் மூலம் நாட்டுபுற மக்களின் மனத்தினை நிறைவு செய்து தங்களது பெருந்தெய்வங்களோடு இத்தெய்வங்களையும் வணங்கும்படி செய்துள்ளன. ஆசைகள் அனைத்தையும் துறந்த சமணத் தீர்த்தங்கரரிடம் தங்கள் தேவைகளைச் சாதாரண மக்கள் வேண்டிப் பெறமுடியாது. இதனைப் பூர்த்திசெய்யும் நோக்கத்தோடும் சமணசமயத்தில் யக்சிவழிபாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.[4] சமணசமயத்தில் இருபத்திநான்கு தீர்த்தங்கரர்களுக்கு, இருபத்துநான்கு யக்சர்களோடு, இருபத்துநான்கு யக்சியரும் காவல்தெய்வங்கள் என்ற முறையில் இப்பெண்தெய்வங்கள் வழிபாடு செய்யப்பட்டன. சமணசமயத்தில் இருபத்திநான்கு யக்சியர் உருவங்களை வேறுபடுத்தி அவற்றிற்குத் தனித்தனியாகப் பெயர்களும் இடப்பட்டுள்ளன.[5] யக்சி என்ற சொல்லே தமிழ் இலக்கியத்தில் "இயக்கி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழிலக்கியத்தில் சிலப்பதிகாரத்திலேயே முதன்முதலில் "இயக்கி" என்ற சொல் வருகிறது. இதுவே தென்னிந்தியாவில் இயக்கி வழிபாடு பற்றிக் கிடைக்கும் குறிப்புக்களில் பழமையானதாகும்.[6] மதுரை நகரத்துக் கோட்டைக்கு வெளிப்புறத்தில் துறவிகள் வாழ்ந்த "புறஞ்சிறை மூதூர்ப்" பகுதியில் இயக்கியின் கோயில் ஒன்று இருந்தது. இதிலிருந்த இயக்கி அனைத்து மக்களாலும் போற்றி வழிபடும் தெய்வமாகத் திகழ்ந்தாள். இதற்கு மாதரி என்ற இடையர் குலப்பெண் பாற்சோறு வைத்து வழிபட்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.[7] சிலம்புகூறும் இயக்கிக்குப் பாற்சோறு படைக்கப்பட்டுள்ளதால் இத்தெய்வம் புலால்உணவை ஏற்றுக்கொள்ளாத சமணசமயப் பெண்தெய்வமாக இருக்க வேண்டும். இவள் பூப்போன்ற அழகிய கண்களைக் கொண்ட தெய்வமாக விளங்கியமையால் ''பூங்கண்இயக்கி'' என்று மக்களால் அழைக்கப்பட்டு வழிபடப்பட்டதையும் சிலப்பதிகாரம் மூலம் அறியமுடிகிறது.

சிலப்பதிகாரத்தினை அடுத்து சமணசமய இயக்கி பற்றி கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் காணமுடிகிறது. இக்காப்பியத்தில் தொன்றுதொட்டு மக்களின் மனதில் இருந்து வரும் இயக்கியின் பொதுவான தன்மைகளே எடுத்துக் கூறப்பட்டுள்ளன. ஆனால் எந்தத் தீர்த்தங்கரர்க்குரிய இயக்கி, அவளது பெயர் ஆகியவை சுட்டப்படவில்லை. இக்காப்பியத்தில் இயக்கியானவள் காண்போரைக் கவரும் அழகிய தோற்றமும், எச்செயலினையும் செய்து முடிக்கும் வெந்திறல் ஆற்றலும் கொண்ட, மந்திர, தந்திரங்கள் நிறைந்த தெய்வமாகக் காட்டப்பட்டுள்ளாள். அழகிய பெண்கள் எழில்மிக்க இயக்கியின் உருவத்திற்கு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளனர்.[8] இயக்கி இமைக்காத கண்களை உடையவள். மந்திரங்களைச் சொல்லி வழிபடுவோர்க்கு, நேரில் தோன்றி அவர்களுக்கு வேண்டியது செய்து, அமிர்தம் போன்ற உணவினை அளித்துக் களைப்பை நீக்குவாள் என்று சிந்தாமணி கூறுகிறது.[9]

கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த பிங்கல நிகண்டிலேயே முதன்முதலாகத் "தருமதேவதை" என்று அழைக்கப்படும் நேமிநாத தீர்த்தங்கரரின் இயக்கியான அம்பிகாவின் உருவநலன் மற்றும் வரலாறு பற்றித் தெரிவிக்கும் சொற்கள் வருகின்றன. முறையே

கி.பி. 16 மற்றும் 17ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய சூடாமணி நிகண்டு, ஆசிரியநிகண்டுகளிலும் தருமதேவி குறிப்பிடப் படுகின்றாள்.[10] கி.பி. 11ஆம் நூற்றாண்டு யாப்பருங் கலவிருத்தியுரையில் மேற்கோளாகக் காட்டப்பட்ட பாடல்களில் இயக்கியின் உருவநலனையும் சிறப்பையும் எடுத்துக்கூறும் பாடல்கள் வருகின்றன. பிற்காலத்தில் தோன்றிய அப்பாண்டைநாதர் உலா, தருமதேவியம்மன் கலித்துறைப்பாடல், தருமதேவிப்பத்து, தருமதேவி சோபனமாலை முதலிய சிற்றிலக்கியங்களிலும் இயக்கி அம்பிகாவின் உருவநலன் பற்றிய செய்திகள் வருகின்றன.

சிற்பங்கள் என்று கூறும்போது கி.பி.எட்டாம் நூற்றாண்டிலிருந்து அண்மைக்காலம் வரையிலான இயக்கியர் உருவங்களைத் தமிழ்நாட்டுச் சமணத்தலங்களில் காணமுடிகிறது. இவை கற்சிற்பங்களாகவும் செப்புத்திருமேனிகளாகவும் உள்ளன. திருப்பருத்திக்குன்றம் போன்ற இடங்களில் விசயநகரவேந்தர் காலத்து ஓவியத்திலும் இவர்களது உருவம் இடம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் பெரும்பாலும் ஆதிநாதரின் இயக்கியாகிய சக்கரேசுவரி, சந்திரபிரபரின் இயக்கியாகிய ஜுவாலாமாலினி, நேமிநாதரின் இயக்கியாகிய அம்பிகா(தருமதேவி), பார்சுவநாதரின் இயக்கியாகிய பத்மாவ்தி, மகாவீரரின் இயக்கியாகிய சித்தாக்கியா ஆகியோரின் உருவங்களே சமணத்தலங்களில் செய்விக்கப் பட்டுள்ளன. இயக்கியரில் அதிக அளவிலும் பரவலாகவும் சிற்பங்கள் செய்து வழிபடப்பட்டவள் இயக்கி அம்பிகா ஆவாள். பிறரது உருவங்கள் அருகிய அளவிலேயே காணப்படுகின்றன. தமிழ்நாட்டு இயக்கியரின் உருவங்கள் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுவது போன்று அழகிய தோற்றமுடைய பெண்களின் உருவங்களாகக் கலைத்திறனுடன் படைக்கப்பட்டுள்ளன.

ஆதிநாதரின் இயக்கியான சக்கரேசுவரி, கரத்தில் சக்கரம் ஏந்திக் காட்சியளிப்பதால் சக்கரதாரிணி என்று அழைக்கப்பட்டாள். புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்திலுள்ள கி.பி.10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஆதிநாதரின் செப்புத் திருமேனியில் அவருக்கு இடப்புறம் சக்கரேசுவரியின் உருவம் உள்ளது.[12] நின்ற நிலையில் கையில் சக்கரத்தினை ஏந்திய பிற்காலச்சோழர் காலத்தினைச் சார்ந்த சக்கரேசுவரியின் உருவம் ஒன்று பள்ளன்கோயிலில் காணப்படுகிறது.[13]

சந்திரபிரபரின் இயக்கியாகிய ஜுவாலாமாலினியின் வாகனம் எருமையாகும். கரங்களில் சக்கரம், வில், அம்பு, வாள், கேடயம், பாசம், அங்குசம் முதலியவற்றுடன் காட்சியளிக்கும் இவளது பழமையான உருவம் தமிழ்நாட்டில் இல்லை.நாயக்கர் காலத்தினைச் சார்ந்த உருவங்களே தற்போது உள்ளன. பொன்னூரிலும், திருப்பருத்திக்குன்றத்திலும் உள்ள சமணக்கோயில்களில் நாயக்கர் காலத்தினைச் சார்ந்த ஜுவாலாமாலினியின் செப்புத்திருமேனிகளைக் காணலாம். இதேபோன்று மகாவீரரின் இயக்கியான சித்தாக்கியாவின் பழமையான உருவங்களைக் காண்பதும் அரிதாக உள்ளது. ஆனால் பார்சுவநாதரின் இயக்கியான பத்மாவதியின் கி.பி.ஒன்பது முதல் பதினோராம் நூற்றாண்டு வரையிலான உருவங்களைத் தமிழ்நாட்டில் காணலாம். தமிழகத்திலுள்ள பாறைச்சிற்பங்களில் பெரும்பாலும் பார்சுவநாதர்க்கு அருகில் வச்சிரக்குடையினை அவருக்குப் பாதுகாப்பாகப் பிடித்துக்கொண்டு நிற்கும் நிலையில் பத்மாவதி வடிக்கப்பட்டுள்ளாள். இதற்குச் சிறந்த சான்றுகளாக கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த கழுகுமலை, ஆனைமலை, சித்தாமூர், ஆட்சிப்பாக்கம், அனந்தமங்கலம் முதலிய இடங்களிலுள்ள பத்மாவதியின் உருவங்கள் அமைந்துள்ளன. இவ்விடங்களில் இருகரங்களுடன் அரவுக்குடையுடன் இவள் காட்சியளிக்கின்றாள். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த தனித்தநிலையில், அமர்ந்தகோலத்தில் நான்கு கரங்களுடன் காணப்படும் பத்மாவதி இயக்கியின் பாறைச்சிற்பங்கள் கழுகுமலை,வள்ளிமலை முதலிய இடங்களில் உள்ளன.

ஆனால் மேலேகண்ட இயக்கியரின் உருவ அமைதியைக் கூறும் பண்டையத் தமிழ் இலக்கியங்களைக் காண்பது அரிதாக உள்ளது. இதற்கு மாறாக நேமிநாதரின் இயக்கியாகிய அம்பிகாவைப் பற்றிய இலக்கிய, சிற்பச் சான்றுகளை அதிக அளவில் காணமுடிகிறது. அம்பிகா இயக்கி தமிழ்நாட்டில் பெரிதும் போற்றி வழிபடப்பட்டிருப்பதை இந்நிலை காட்டுகிறது. தமிழ்நாட்டில் கி.பி.எட்டாம் நூற்றாண்டிலிருந்து நாயக்கர்காலம் வரையுள்ள அம்பிகாவின் உருவங்கள் இருபதிற்கும் மேற்பட்ட இடங்களில் உள்ளன. இவற்றில் சித்தாமூர், ஆறகளூர் (கி.பி. 10ஆம் நூ.), சிங்கணிக்குப்பம் (கி.பி.13 ஆம்.நூ.) போன்ற இடங்களைச் சார்ந்த

அம்பிகா செப்புத்திருமேனியாக வடிக்கப்பட்டுள்ளாள். கி.பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளைச் சார்ந்த அம்பிகாவின் தலைசிறந்த பாறைச் சிற்பப் படைப்புகள் சிதறால், கழுகுமலை, ஆனைமலை, வள்ளிமலை, சோழபாண்டிபுரம், சித்தாமூர், அனந்தமங்கலம், தியாகதுர்க்கம், திருமலை, திருப்பாண்மலை முதலிய இடங்களில் உள்ளன.[14] கி.பி. 12,13 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த தனித்த நிலையிலுள்ள சிற்பங்களாக விளாத்திகுளம், வெண்குன்றம், பூண்டி முதலிய இடங்களிலுள்ள அம்பிகாவின் உருவங்கள் விளங்குகின்றன.

மேற்காணும் சிற்பங்களில் இயக்கியம்பிகா சிம்ம வாகனத்துடன் தனது இரு குழந்தைகள் மற்றும் தோழிப் பெண்ணோடு படைக்கப்பட்டுள்ளாள். பாறைச்சிற்பங்களில் இவள் கற்பக விருட்சகத்தின் (கமுகு) கீழே நின்றநிலையில் காணப்படுகிறாள். கி.பி.11 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் செய்விக்கப்பட்ட தனித்த நிலையில் விளங்கும் அம்பிகாவின் உருவங்களில் தலையிலுள்ள மகுடத்தின் முன்புறம் நேமிநாதரின் அமர்ந்தகோலம் உள்ளது. வள்ளிமலையிலுள்ள கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த அம்பிகாவின் பாறைச்சிற்பத்தில் அவளது தலைக்குச் சற்று மேலே தனித்த நிலையில் நேமிநாதரின் உருவம் காணப்படுகிறது. இதுவே அருகனை அம்பிகா தலையில் வைத்துச் சுமப்பது போன்று காட்டப்படுவதற்கு முன்னோடியாக உள்ள சிற்பம் என்று கூறலாம்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய பிங்கலநிகண்டு இயக்கி அம்பிகாவை மரகதவல்லி, பூகநிழலினள், பரமசுந்தரி, இயக்கி, பகவதி, அருகனைத்தரித்தாள், அறத்தின்செல்வி, அம்பாலிகை என்று குறிப்பிடுகிறது. இதனையே சூடாமணிநிகண்டும், ஆசிரியநிகண்டும் கூறுகின்றன. இயக்கி கற்பகவிருட்சத்தின் கீழே நின்றதைப் பூகநிழலுற்றவஞ்சி, பூகமர்நிழல்வஞ்சி என்று சூடாமணி நிகண்டும் ஆசிரிய நிகண்டும் கூறுகின்றன.[15] அருகனைத் தலையில் வைத்துச் சுமந்து கொண்டிருப்பதை அருகனைத்தரித்தாள், அருகனை முடிகவித்தபகவதி என்று கூறுகின்றன. பிங்கலநிகண்டு குறிப்பிடுவதுபோன்று அந்நிகண்டிற்கு முந்தையகாலத்தில் செய்விக்கப்பட்ட கழுகுமலை, சிதறால், தியாகதுர்க்கம், சோழபாண்டிபுரம் அம்பிகாவின் உருவங்கள் கற்பகவிருட்சத்தின்

கீழே நிற்கும் நிலையில் காணப்படுகின்றன. அருகனை முடிதரித்தவள் என்று பிங்கலநிகண்டு குறிப்பிடுவது போன்று அந்நிகண்டிற்குப் பிந்தையகாலத்துச் சிங்கணிக்குப்பம், விளாத்திகுளம் இயக்கியர் உருவங்கள் காட்சியளிக்கின்றன. இவ்வுருவங்களில் மகுடத்தின் முன்புறம் தீர்த்தங்கரர் உருவம் அமர்ந்த நிலையில் உள்ளன. இதனையே நிகண்டுகள் அருகனைத்தலையில் தரித்தவள், அருகனை முடிதரித்தவள் என்று குறிப்பிடுகின்றன.

பிற்காலச் சிற்றிலக்கியமான அப்பாண்டைநாதர் உலா இயக்கி அம்பிகாவைச் சிங்கத்தினை வாகனமாகக் கொண்டவள், தத்தையைத் தன் கரத்தில் கொண்டவள், பொன்இசக்கி என்று குறிப்பிடுகிறது.[16] சிங்கத்தினை வாகனமாக அம்பிகா பெற்றிருப்பதைத் தமிழ்நாட்டில் பல இயக்கியர் சிற்பங்களில் காணலாம். கிளியை (தத்தை) தனது கரத்தில் வைத்திருக்கும் இயக்கி அம்பிகாவின் உருவம் சோழபாண்டிபுரத்தில் உள்ளது. இலக்கியத்திற்கு முன்னோடியாக விளங்கும் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த அம்பிகாவின் சிற்பம் இதுவாகும். பொன்மயமான உருவத்தை அம்பிகா இயக்கி கொண்டிருந்தாள் என்பதை அவளது உருவத்தைத் குறிக்கும் திருப்பாண்மலைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.[17] கி.பி.780ஆம் ஆண்டைச் சார்ந்த அக்கல்வெட்டில் இவ்வியக்கி "பொன்னியக்கியார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளாள். இச்சொல்லே அப்பாண்டைநாதர் உலாவில் "பொன்இசக்கி" என்று வருகிறது.

இயக்கியரைத் தவிர கொற்றவை, மகிசாசுரமர்த்தனி போன்ற உருவ அமைப்புடைய பெண்தெய்வங்களையும் சமணர்கள் வழிபட்டுள்ளனர். மதுரைக்கு அருகிலுள்ள சமணமலையில் செட்டிப்புடவுப் பகுதியில் எட்டுக்கரங்களுடன் வில், அம்பு, வாள், கேடயம், அங்குசம், பாசம் முதலிய அயுதங்களை ஏந்தி யானைமீது வந்த அவுணனைச் சிங்கத்தின் மீது அமர்ந்து எதிர்த்துப் போரிடும் கோலத்தில் ஒரு பெண்தெய்வத்தின் பாறைச்சிற்பம் காணப்படுகிறது. இவ்வுருவம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இவ்வுருவத்தை அம்பிகா[18] என்றும், சித்தாக்கியா[19]என்றும் தவறாகக் கருதியுள்ளனர். இதனை யு.பி.சா. அவர்கள் வடநாட்டில் சமணர்கள் வழிபட்ட கொற்றக்கிரியா, கொற்றாரியா என்ற பெண்தெய்வமாக

இருக்க வேண்டுமென்று கருதுகின்றார்.[20] தமிழ்நாட்டில் பல்லவர்காலத்தில் சிறப்புடன் விளங்கிய மகிசாசுரமர்த்தினி வழிபாட்டிற்கு இணையாக இவ்வுருவ வழிபாட்டினைச் சமணர்கள் கொண்டு வந்திருக்க வேண்டும். சமணமலையிலுள்ள இச்சிற்பத்தின் தாக்கத்தினால் தோன்றிய தமிழ்ப்பாடல் ஒன்று சமணர் இயற்றிய யாப்பருங்கல விருத்தியுரையில் காணப்படுகிறது. பின்வரும் அத்தமிழ்ப் பாடல் யாப்பருங்கல விருத்தியுரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இதுபோன்று இன்னும் பல பாடல்கள் விருத்தியுரையில் உள்ளன.[21]

"இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின் எதிர்த்த தானையை
இலங்கும் ஆழியின் விலங்கியோள்
முடங்கு வாலுழை மடங்கல் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள்
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்தரி
வளங்கொள் பூண்முலை மகிழ்ந்தகோன்
தடங்கொள் தாமரையிடங்கொள் சேவடி தலைக்குவைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே."

சமண சமயப் பெண்தெய்வங்களின் சிற்பங்கள் மற்றும் அவை தொடர்பான இலக்கியங்கள் நிகண்டுகள் ஆகியவற்றையும் ஒப்பிட்டுச் செய்யப்பட்ட மேற்கண்ட ஆய்வு பின்வரும் சில முடிவுகளை நமக்குத் தருகின்றன. சமணசமயத்தில் ஏனைய இயக்கியரைக் காட்டிலும் தருமதேவதை எனப்பட்ட இயக்கி அம்பிகாவின் உருவங்கள் இலக்கியங்களிலும் சிற்பங்களிலும் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. இவளது சிற்பங்களின் தாக்கத்தைத் தமிழ் இலக்கியங்களிலும் நிகண்டுகளிலும் அதிகஅளவில் காணமுடிகிறது. இவள் குறித்த இலக்கியங்கள் பிற்கால இயக்கி அம்பிகாவின் வடிவத்திற்கு வழிகாட்டியாய் அமைந்துள்ளன. இதே போன்று மகிசாசூரமர்த்தினிக்கு இணையான கொற்றாரியா கொற்றக்கிரியாவின் சிற்பம் அவள் உருவநலனைக் குறிக்கும் தோத்திரப் பாடல்கள் தோன்றுவதற்குக் காரணமாகஅமைந்துள்ளது. இயக்கியின் உருவ அமைதியைக் குறிப்பிடும் தமிழ் இலக்கியமும் நிகண்டுகளும் சமணத்தலங்களில் காணப்படும் சில இயக்கியரின்

சிற்பங்களுக்குப் பிந்தையதாகக் காணப்படுவதால் சிற்பங்களே இலக்கியத்திற்கும் நிகண்டிற்கும் வழிகாட்டுதலாக இருக்க வேண்டும். சிற்பங்கள் இலக்கியத்தின் மீது தாக்கம் ஏற்படுத்திய அதே வேளையில் கி.பி.12,13ஆம் நூற்றாண்டுகளில் செய்விக்கப்பட்ட இயக்கியர் உருவங்களுக்கு இலக்கியமும் வழிகாட்டுதலாக அமைந்துள்ளது. இதனால் இயக்கியர் சிற்பங்களின் வடிவமைப்பிலும் இலக்கியத்தாக்கம் நிகழ்ந்துள்ளது எனலாம்.

அடிக்குறிப்புகள்

1. a) K.Ananda Coomarasamy, History of Indian and Indonesian Art, p.72
   b) S.B. Dasgupta, An Introduction to Tantric Buddhism, University of Calcutta, 1990,p.150.
2. D.Devangana Desai, Erotic sculptures of India - A Socio Cultural study, Tata Mogrow - Hill Publishing co, New Delhi, 1975 ,p.23.
3. E.B. Cowell, The Jatakas-7 Vols, Cambridge, 1875 - 1907.
4. R.N. Nandi, Religious Institutions and Culta in the Deccan (C.AD600-1100), Motilal Banarsidass, Delhi, 1973, p.147.
5. R.S. Gupta, Iconography of the Hindus, Buddhists and Jains, D.B.Taraporevala sons & co., Private Ltd., Bombay, 1972, p.115-116.
6. P.B.Desai, Jainism in South India, Jaina Sanskrit Samraksha Sanga Sholapur, 1957, p.13.
7. சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, அடி. 115-118.
8. சீவகசிந்தாமணி, பா.எண். 596, 1015, 1178, 1658.
9. மேலது. பா.எண். 1178, 1248, 1600.
10. மு.சண்முகம், நிகண்டு சொற்பொருட்கோவை - தெய்வப்பெயர்,மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1982, பக்.254-256.
11. வெ.வேதாசலம், இயக்கி வழிபாடு, அன்னம் வெளியீடு, சிவகங்கை,பக்.59-74.

12. K.Lakshminarayanan, Jainism in Pudukkottai District, Tamil Arasu, No,74.
13. இயக்கி வழிபாடு, பக்.57-58.
14. ஏ.ஏகாம்பரநாதன்,தொண்டைநாட்டுச் சமணக்கோயில்கள், ஜைன இளைஞர் மன்றம், சென்னை, 1991.

ஏ.ஏகாம்பரநாதன், சோழர்காலத்தில் சமணசமயவளர்ச்சி, ஜைன ஆய்வியல் கழகம், சென்னை. வெ.வேதாசலம், இயக்கி வழிபாடு, பக். 59 -74.

15. வீ.சொக்கலிங்கம், ஆசிரியநிகண்டு, சரசுவதிமகால் நூல்நிலையம், தஞ்சை. 1975, பக். 39.
16. இயக்கி வழிபாடு. பக். 73.
17. ARE.10/ 1895; Epi. Ind. vol. IV , P.136.
18. A.Ghosh(ed), Jaina Art and Architecture, New Delhi, 1975, Vol. I. P. 98. Vol.II. p.228-229.
19. P.B. Desai, Jainism in South India, p.59.
20. U.P. Shah, Jaina-Rupa-Mandana, Abbinav Publication, New Delhi, 1987, P.338.
21. யாப்பருங்கல விருத்தியுரை, கழகவெளியீடு, சென்னை, 1973, பக். 109-110, 319, 320, 410.

ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப் பார்வை - 1

அ.மா. பரிமணம்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இந்நிலையில், "பிராம்மி தோன்றிய நாளிலேயே தமிழி எழுத்துக்களும் தோன்றியிருத்தல் வேண்டும். இங்கும் எழுத்துகளான கருத்துகளை ஏற்றுத் தமிழ்மொழிக்கு ஏற்ப ழ, ள, ற, ன என்ற சிறப்பு ஒலிகளுடன் தமிழ்மொழி வல்லுநர் தோற்றுவித்தனர் என்று கொள்ளுவது பொருந்தும்" என்று டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் கூறியிருப்பது ஏற்கத்தக்கதாகும். மேலுமவர், 'தமிழ்நாட்டில் வழங்கிய எழுத்து ஆகலின், வடமொழியில் இதை(த்) தமிழி என்று குறித்தனர்' என்றும், 'தமிழகத்தில் விளங்கிய பண்டைத் தமிழ் எழுத்துக்களை பிராகிருத மொழியினால் தமிழி, திராவிடி என்று அழைத்தனர்' என்றும் குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது. நெடுங்காலத்திற்கு முன்னரே வட வேங்கடம், தென்குமரி, குணகுட கடல் ஆகிய எல்லைக்குட்பட்ட இந்தியப் பகுதியில் தமிழ்மொழி வழங்கப் பட்டமையால் அப்பகுதி தமிழ்நாடு, தமிழகம் என்று பெயர்பெற்றது. தமிழ்ச் சிறப்பெழுத்தாகிய ழகரம் வடமொழியில் இன்மையால், அதனை ஒலிக்கும் போது ளகரத்திற்கும் ழகரத்திற்கும் இடைப்பட்டதான ஒலியில் ஒலித்திருக்க வேண்டும். அதனால் ஒலியளவில் மாறுபட்டிருந்தாலும் தமிளி (Damili) என்று எழுதியிருத்தல் வேண்டும். தமிழகத்தில் வடமொழிச் செல்வாக்கு மிக்க நிலையில், வடமொழியினைத் தமிழர்கள் எளிதில் ஏற்க உதவும் வகையில் அம்மொழிக்குக் 'கிரந்தம்' என்னும் பெயரில் ஒருவகை எழுத்தினை (இலிபி) தேவநாகிரி எழுத்திற்கு மாற்றாக அமைத்துக்கொண்டனர். அதனைக் கல்வெட்டு, தமிழ்நூல் உரைகள் ஆகியவற்றில் அமையும் மணிப்பிரவாள நடையில் பயன்படுத்தலாயினர்.

தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட கிரந்த எழுத்தில் றனரம், ழகரம் போன்றவற்றிற்கான குறியீடு இல்லாமையால் கிரந்த எழுத்துக்களிடையே றகர, ழகரங்களைச் சில கல்வெட்டுக்களில் தமிழ் வரி வடிவிலேயே எழுதிக் காட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாக திரு.ஹூல்ட்சு (E. Hultzsch) அவர்கள் தாம் தொகுத்து வெளியிட்டுள்ள ஒரு கல்வெட்டுத் தொகுதியில் ஒரு கல்வெட்டிற்கு எழுதியுள்ள முகவுரையினைக் குறிப்பிடலாம். "செப்பேட்டின் முதல் 5 இதழ்கள்,

கிரந்த எழுத்திலமைந்த 38 சமசுகிருதச் செய்யுட்கள் கொண்டுள்ளன........ சமசுகிருதப் பகுதியின் இடையே சில தமிழ் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை வைம்பல் குழி (வரி 42), சிறீ, புறம்பிய (வரி 45), பறிவி (வரி 62) என்பனவாகும்" (South Indian inscription - Vol. II, Parts III, IV and V - Reprint by Navrang, New Delhi - 1984) இந்தச்செப்பேடுகள், உதயேந்திரம் செப்பேடுகள் என்று வழங்கப்படும். (சூல்ட்சு இச்செப்பேடுகளின் வடமொழிச் செய்யுட்களைத் தேவநாகரி எழுத்துக்களில் கொடுத்துள்ள போதும் அவற்றின் மூலப்படி கிரந்த எழுத்துக்களில் அமைந்திருப்பதனை 'நேர்படி' (Fascimile) எடுத்துக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.)

டாக்டர் நாகசாமி அவர்கள் கருத்துப்படி. தமிழ் என்னுமளவில் இக்கால வரிவடிவம் மனக்கண்முன்னே தோன்றுவதனைத் தவிர்த்தற்பொருட்டு அதன் பழைய வரிவடிவத்தை நினைவூட்டும் வகையில், பண்டைத் தமிழ் வரிவடிவினைத் 'தமிழி' என்னும் பெயரால் குறிப்பிடுவது பெருங்குறையாகாது. தமிழ் மொழியினை கி.பி. 3-ஆம் நூற்றாண்டு அளவில் வட்டெழுத்து என்னும் பெயரிலமைந்த ஒரு வரிவடிவில் எழுதும் வழக்கமும் தோன்றியதாகக் கூறுகின்றனர். அது, 8, 9 ஆம் நூற்றாண்டுகள் வரையில் வழக்கிலிருந்து பின்னர் மறைந்ததாகவும் கூறுகின்றனர். அதன் தோற்றம் பற்றியும் அறிஞர்களிடையே வழக்கம்போல் கருத்துவேறுபாடு உள்ளது. ஒரே கல்வெட்டில் பழந்தமிழ் வரிவடிவமும், வட்டெழுத்து வரிவடிவமும் இடம் பெற்றுள்ளதனைக் குறிப்பிட்டு, அதற்கு எடுத்துக்காட்டாக அரச்சலூர்க் கல்வெட்டினைக் காட்டியுள்ளார். ஒரு நிலையில் வட்டெழுத்து, பலரால் படிக்கமுடியாத பாங்கினை அடைந்துள்ளது போலும். இதனை இரண்டு கல்வெட்டுக் குறிப்புக்களால் விளக்கியுள்ளனர். ஒன்று, "கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு கல்வெட்டில் இவ்வெழுத்து 'வட்டம்' என்று அழைக்கப்பட்டுள்ளது. திருமலை ஜீர்ணிக்கையால் உத்தாரணம் பன்னினவிடத்து திருமலையில் கல்வெட்டு வட்டம் ஆகையால், தமிழாகப் படியெடுத்து என்று கல்வெட்டு கூறுகிறது" என்பதாகும். மற்றொன்று, "திருக்குற்றாலத்து குற்றால நாத சுவாமி கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டிலிருந்து, புரிந்து கொள்ள முடியாத வட்டம் நீங்கலாக மற்ற எல்லாக் கல்வெட்டுகளும்

திரும்பவும் சுவரில் எழுதப்பட்டன" என்பதாகும் (கல்வெட்டியல் - தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு - 1972) கிடைத்துள்ள தொன்மையான பல நடுகற்களிலும் இருவகை வரிவடிவங்களும் இடம்பெறக் காணலாம்.

குகைக் கல்வெட்டுக்கள் போன்றவற்றை டாக்டர் T.V. மகாலிங்கம் போன்றோர் ஆங்கில வரிவடிவில் எழுத்துப் பெயர்ப்புக் குறியீடுகளுடனும் (Diacritic Marks) டாக்டர். நாகசாமி போன்றோர் அவற்றைத் தாம் படித்தவாறு இக்கால எழுத்துக்களிலும் வெளிப்படுத்தியுள்ளனர். குகைப் பாறைத்தலத்திலுள்ள மூலவரி வடிவத்தைக் காணவும் பயிலவும் பலருக்கும் வாய்ப்பின்மையால், ஒருவர் மற்றொருவர் கருத்தோடு மாறுபடுவதற்கான காரணத்தினை அறிவதில் சிரமம் உள்ளது. ஆய்வாளர்கள் அக்கல்வெட்டுக்களின் சொற்களை, தொடர்களைப் படிப்பதிலும் பொருள் கொள்வதிலும் உண்டாகும் மாறுபாடுகளைக் காணமுற்படுவது இக்கட்டுரையின் நோக்கமன்றாயினும், ஒன்றிரண்டு மேற்கோள்களைக் காண்பது ஏற்புடையதாகும்.

அரிட்டாபட்டிக் கல்வெட்டின் (மீனாட்சிபுரம் அல்லது மாங்குளம்) தொடக்கச் சொல்லினைக் "கணிய்" என்று "கல்வெட்டியல்" எனும் நூலில் டாக்டர். நாகசாமி அவர்கள் கொண்டு, கணி என்பது சமண சங்கத்தைச் சேர்ந்தவர்களைக் குறிக்கும் சொல் என்று விளக்கியுள்ளார் (கல்வெட்டியல் பக். 50) அச்சொல்லினை (காணியன்) Kāniyan̲ என்று படித்து வேறுவகையாகப் பொருள்கூறியுள்ளனர். K.V. சுப்பிரமணிய ஐயர், நாராயணராவ் முதலியோர் (South Indian Palaeography. Page 202-211) அக்கல்வெட்டில் இடம்பெறும் ஒரு சொல்லினைக் 'கொட்டூ பித்தஅ' எனவும், அதனை "Ko ṭu pitō nā" என்று கொண்டு எழுத்துப் பெயர்த்துள்ளனர். 'கொடூ பித்தஅ' என்பதற்குத் திரு ஐராவதம் போன்றோர் கொடுப்பித்த (கொடுக்கச் செய்த) என்று பொருள் கொள்கின்றனர். பிறர் பாறையைக் 'கொத்திச் செதுக்கி' என்று பொருள் கூறியுள்ளனர்.

குகைத் தளக் கல்வெட்டுக்களில் அரச்சலூர்க் கல்வெட்டிற்குத் தனி இடமுண்டு. கல்வெட்டு ஆய்வாளர் பலர் அதனை விரிவாக ஆய்ந்து விளக்கியுள்ளனர். இதன் முதற் பகுதியில்,

தை த தை த தை

தை த (து) தை த

தை த தை த தை

தை த (து) தை த

(தை த தை த தை)

என்பது போல இருபகுதிகளும், சிதைந்து படிக்க முடியாத நிலையில் ஒரு பகுதியும், இவற்றையடுத்த பகுதியில் "எழுத்துப் புணருத்தான் மணிய் வண்ணக்கன் தேவன் சாத்தன்" (கல்வெட்டியல் - அரசு வெளியீடு, பக் 71) என்று இரு வரியில் அமைந்த பிராமி எழுத்துப் பகுதியும் உள்ளனவாகப் பதிப்பித்துள்ளனர். இதனைத் திரு. தி.நா. இராமச்சந்திரன், பேராசிரியர். T.V. மகாலிங்கம், திரு. ஐ. மகாதேவன், திரு. இரா. நாகசாமி முதலியவர்களும், மத்திய அரசுக் கல்வெட்டு ஆய்வுத்துறையினரும் படித்துப் பொருள் விளக்கம் செய்துள்ளனர். ஆனால் படிப்பதிலும் பொருள் கொள்வதிலும் மாறுபட்டுள்ளனர். அவ்வாறு மாறுபட்டுக் கூறிய கருத்துக்களின் சுருக்கம் வருமாறு :

1. தை த தை த தை என்றிங்ஙனம் அமைந்த பகுதியும், இரண்டு இரு அடிச் செய்திக் கல்வெட்டும் வெவ்வேறு காலத்தின.

2. இரு பகுதிகளுமே ஒரே காலத்தில் பொறிக்கப்பெற்றன.

3. தை, த முதலியன இசை - கூத்துத் துறைகளில் அமையும் தாளச் சொற்கட்டுப் போன்றன (இவற்றை வலமிடமாகவும், கீழ்மேலாகவும் படித்தால் ஒரே தொடராகவே அமையக் காணலாம். மிறைச் செய்யுள் வகையில் மாலை மாற்றுப் போலவுள்ளது)

4. ஆதன்சாத்தன் ஒரு கூத்தாசிரியன்; வர்ணகம் பாடவல்ல இசையாசிரியன்; ஊர் மணியகாரனாக இருந்திருக்கலாம் த, தை முதலியன கூத்தில் (நாட்டியம்) இடம்பெறும் தாள அடைவுகள்.

5. இக்குகை ஆசீவகத்துறவியர் இருந்த இடம், அவர்கட்காகத் தேவன் சாத்தன் இக்குகைத்தளத்தை அமைத்துத் தந்தான். வண்ணக்கன் என்பவன் இரத்தினப் பரிசோதகன்.

6. இரத்தினப் பரிசோதகனான தேவன்சாத்தன், 'மணி வண்ணக்கன்' ஏழு தானம் (கற்படுக்கைகளை) அமைத்துக் கொடுத்தான்.

7. புணருத் தான் என்பது எழுத்துக்களைப் புணர்த்துச் (கூட்டி) செய்தான் எனப்படும். அச்சொல்லுக்குச் செய்து கொடுத்தான் எனவும் பொருள் உண்டு.

8. இதில் உறைந்த ஆசீவகத் துறவியர் மந்திர, சோதிடக் கலைகளில் வல்லவர்களாதலின் அவ்வகையிலான குறியீடுகளாக த, தை போன்றவற்றைக் கொள்ள வேண்டும்.

இந்தக் கல்வெட்டினைப் படிப்பதிலும் பொருள் கொள்வதிலும் அத்துறை ஆய்வாளர்கள் படாதபாடு பட்டுள்ளனர் என்றும், அக்கல்வெட்டைப் படாத பாடு படுத்தியுள்ளனர் என்றும் தெரிகிறது. உண்மையான விளக்கம் இந்த ஆய்வாளர்கள் கூறியவற்றுள்ளும் இருக்கலாம். இவற்றிற்கு அப்பாற்பட்டுமிருக்கலாம். இந்நிலையில் ஒன்றுக்கு மேற்பட்டோர் இசையும் கருத்தினை (Majarity Opinion) ஏற்பது பொருத்தமாகும். அங்ஙனமாயின் குடுமியான்மலைக் கல்வெட்டு இசைத்தமிழ்க் குறிப்புக்களைக் கொண்டிருப்பது போல அரச்சலூர்க் கல்வெட்டு நாடகத் தமிழ்க் குறிப்புகளைக் கொண்டிருப்பதாகக் கருதலாம். புகலூர்க் கல்வெட்டுக்களில் ஒன்றினைப் படித்துப் பொருள் கொண்ட ஆய்வாளர்கள் அதிற் காணப்படும் செய்திகள் சங்ககாலத்தில் எழுந்த இலக்கியச் (பதிற்றுப்பத்தின் - பதிகம்) செய்திகளோடு தொடர்புடையனவாக உள்ளன என்பதில் மாறுபடாமல் ஒரே வகையான கருத்துக் கூறியிருப்பது ஆறுதலளிப்பதாக உள்ளது. அக்கருத்து, சங்க நூல்கள் கூறும் செய்திகளை உறுதிப்படுத்தும் கல்வெட்டுச் சான்றாக அமைவதும், அதனை வரலாற்றாசிரியர்கள் ஏற்றிருப்பதும் பாராட்டத்தக்கன.

எழுத்துப் பழமை, காலங்களின் பருவ மாறுபாடுகளால் காலப்போக்கில் தோன்றும் சிதைவுகள் முதலியன காரணமாகப் பழம் பாறைப் பொறிப்புகளைப் படிப்பதிலும் பொருள் காண்பதிலும் வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பேயாகும். ஆனால் எவ்வித மாறுபாடுமின்றித் தெளிவாகப் படிக்கப் பெற்ற கல்வெட்டுத்

தொடர்களுக்குப் பொருள் காண்பதிலும் வேறுபாடு தோன்றியுள்ளமை சிந்திக்கத் தக்கதாகும்.

மாமன்னன் இராசராசனுடைய வீரம் அல்லது ஈரப் புகழைப் புலப்படுத்தி நிற்கும் மெய்க்கீர்த்தித் தொடர்களுள் 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி' என்பது ஒன்றாகும். அக்கல்வெட்டினைப் படித்துப் பதிப்பித்த ஹூல்ட்சு (E. Hultzsch) அவர்கள் அத்தொடர்ப் பொருளைத் தாமுணர்ந்த வகையில் விளக்குங்கால், 'இராசராசன் காந்தளூரில் அருங்கலம் போன்ற ஒரு மன்றத்தை இயற்றினான்' (built a Jewel like hall at Kandulur) என்று குறிப்புரை வரைந்துள்ளார். (S.I.I. Vol. 1. Page 61) அவர் தம்முடன் பணியாற்றிய தொல்லியல் ஆய்வறிஞர்களின் துணையொடு சிந்தித்துக் கூறிய விளக்கமாக இதனைக் கொள்ளலாம். உண்மை காணும் முயற்சியில் அவர் கொண்டிருந்த ஆர்வம், அவர் வெளியிட்டுள்ள தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளால் நன்கு புலப்படுகின்றது. தமக்கு விளங்காதவற்றை 'இப்பகுதி விளங்கவில்லை' என்று தாம் பதிப்பித்த நூல்களில் டாக்டர். உ.வே. சாமிநாதையரவர்கள் குறிப்பிட்டுச் சொல்வதுபோல இக்கல்வெட்டறிஞரும் தமக்கு விளங்காதவற்றை விளங்கவில்லை என்று குறிப்பிட்டுச்செல்வார். எடுத்துக்காட்டாகத் தஞ்சைப் பெரிய கோயிற் கல்வெட்டொன்றில் இடம்பெறும் "சங்கிட்டடைத்த கற்கண்டு ஒன்றில் தடவிக் கட்டின பளிங்கு இரண்டும்" என்னும் தொடரில் உள்ள 'சங்கிட்டடைத்த கற்கண்டு' என்னும் தொடருக்கு அடிக்குறிப்பாகக் "கற்கண்டு என்பது வெல்லத்தைக் குறிக்கும். அப்பொருள் இங்குப் பொருந்தவில்லை. அத்தொடரின் பொருள் எனக்கு விளங்கவில்லை (Karkandu means, Sugar - Candy, Which does not suit here. I do not understand the term' சங்கிட்டு அடைத்த கற்கண்டு. - S.I.I. Vol II. No. 90. Page 413 Foot note) என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் ஆய்வாளர் சதாசிவ பண்டாரத்தாரவர்கள், காந்தளூர்சாலை என்பது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி என்றும், இராச ராசன் போர்புரிந்து அடைந்த வெற்றியைக் 'காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளி' என்னும் தொடர் குறிக்கின்ற தென்றும் கூறுவார். (பிற்காலச்சோழர் வரலாறு. பக். 100) காந்தளூரில் மாணவர்கள் உண்பதற்கான கலன்களை வரையறை செய்தான் (Limited the no of students to be fed in the Sala) என்று கருத்துரைத்தாருமுளர்.

இவ்வாறெல்லாம் ஆய்வாளர்களின் சோதனைகளுக்கு ஆட்பட்டிருந்தபோதிலும், காலவெள்ளத்தில் கரைந்துபோகாமல், காலங்காலமாகத் தொடர்ந்து வரும் தமிழக வரலாற்றுச் செய்திகளை மௌனமாகத் தாங்கி நிற்கும் கருவூலங்களாய், தம்மைத் தேடிவருவோர் கண்களுக்கு மட்டும் புலப்படும் ஆவணங்களாய் விளங்கும் நடுகற்கள், கற்பொறிப்புகள், செப்பேடுகள் ஆகியன எழுத்துப்பிழைகள் விரவப் பெற்று விளங்குவதனை ஓரியற்றமிழ் மாணவன் என்னும் முறையில் என்னால் புறக்கணிக்க இயலவில்லை. அதனால் அவை பற்றியும், அவை தோன்றுவதற்கான சூழ்நிலைகள் பற்றியும் அறிய முற்படுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இதுகாறும் சிறியனவும், பெரியனவுமாகப் பல நூற்றாண்டுக் கணக்கான கல்வெட்டுக்கள் கண்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இன்றும் கண்டிபிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் எல்லாவற்றிலுமுள்ள பிழைகளைக் கண்டு காட்டுவது முடியாததும், தேவையற்றதுமாகும். அரிதின் முயன்று தேடாமல் மேலோட்டமாகக் காணுங்கால் அகப்படும் பிழைகளுள் சிலவே ஈண்டுக் குறிப்பிடப்படும். தம் காலத்திற்கு மிக முற்பட்டகாலத்திலிருந்து, வழக்குஞ்செய்யுளுமாகிய இருநிலையிலும் வழங்கிவரும் இயற்றமிழ் மொழிக்குத் தொல்காப்பியர் வகுத்தளித்த தொல்காப்பிய மொழி மரபு காலந்தோறும் எவ்வாறெல்லாம் மாற்றமெய்தி வந்துள்ளது என்பதனை உணர இப் 'பிழை காண் படலம்' உதவியாகும். இராசராசன் கல்வெட்டுக்களை மையமாகக்கொண்டு அவன் காலத்திற்கு முன்னும் பின்னுமாய காலக் கல்வெட்டுக்களைக் காண்பது ஏற்புடையதாகும்.

மாமன்னன் இராசராசன் இடைக்கால மூவேந்தர்களுள் தலைசிறந்தவனும் தனித்தன்மை வாய்ந்தவனுமாவான். அவன் எழுப்பிய தஞ்சைப் பெருங்கோயில், அவனும் குடும்பத்தினரும் அதற்குத் தெய்வத் திருமேனிகளாக, அணிகலன்களாக, பரிகலன்களாக, ஆடன் மகளிராக, மெய் காப்புக்களாக, நிலக் கொடைகளாக வழங்கியனவெல்லாம் அவன் வானுற எடுத்த 'தக்ஷிண மேருவிடங்கன்' எனும் விமானத்தொடு விளங்கக் காணலாம். இதனைப் போலவே அவர்கள் ஆணைகளைத் தாங்கி அமையும் கல்வெட்டுக்களைச் செம்மையாகவும் அழகாகவும்

அமைக்கவும் வழிகாட்டியாக விளங்கியுள்ளான். பதிற்றுப்பத்தின் பதிகங்களை ஒரு வகையில் ஒக்கும் 'மெய்க்கீர்த்தி' என்னும் பகுதி, தமிழ்க் கல்வெட்டுலகில் இவன் உருவாக்கிய புதுமையாகும். இவனது கல்வெட்டுக்களில் அமைக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் கவின்மிக்க வடிவில் விளங்குவதனை இன்றும் காணலாம். இன்றும் தஞ்சைப் பெரிய கோயிலுக்குச் செல்வோர் கல்லெழுத்துப் பயிற்சி இல்லாதவராயினும், விமானத்தின் வடபுறச்சுவரின் அடிப்பாகத்தில், சண்டிகேசுவரர் திருமுன்புக்கு எதிரே உள்ள கற்பொறிப்பினைக் கண்டால் எழுத்துக்களின் அழகினைக் கண்டின்புறக்கூடும். இம்மன்னனின் கல்வெட்டுகள் தமிழகத்தின் பல இடங்களிலும், இவனது ஆட்சி நிலவிய தமிழகமல்லாப் பகுதிகளிலும் கிடைத்துள்ளன. எழுத்தின் வடிவில் செம்மை அமைய விரும்பிய இராசராசன், கல்வெட்டு வாசகத்தில் எழுத்துப்பிழை நேர அவனறிந்து விட்டிருக்கமாட்டான். எனினும் இடம்பெற்ற பிழைகளுக்கான காரணத்தை ஒருவகையில் ஊகிக்கலாம். அதுவே உறுதி எனக் கூறவியலாது. இராசராசன் கல்வெட்டுக்களில் - தமிழ்க் கல்வெட்டுக்களில் - வடமொழிச் செய்யுட்பகுதிகள், தொடக்கத்திலும் இடையிலும் இடம் பெற்றிருப்பதனைக் காணமுடிகின்றது. 'சுவஸ்தி ஸ்ரீ' என்னும் மங்கலவாசகம் தவறாது இடம் பெறக் காணலாம். இம்மன்னனின் கல்வெட்டுக்கள் சிலவற்றின் தொடக்கத்தில் இரண்டடிகளாலான ஒரு வடமொழிச் செய்யுள் - சுலோகம் - இடம் பெறுவதையும் காணலாம். தமிழ்க்கல்வெட்டில், கிரந்த எழுத்துக்களில் மணிப்பிரவாளமாக அமைந்த தமிழ்நடையை நிரம்பக் காணலாம்.

தமிழ்க் கல்வெட்டுக்களின் ஊடே இடம்பெறும் சமசுகிருதச் சொற்கள், தொடர்கள் ஆகியன கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. ஒரு சொல்லின் தொடக்கத்தில், இடையில் அல்லது ஈற்றில் ஒன்றிரண்டு எழுத்துக்கள் கிரந்த லிபியில் எழுதப்படுவதுமுண்டு. 'வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே' என்னும் தொல்காப்பிய ஆணை எளிதாகவும் தேவையற்ற முறையிலும் மீறப்பட்டுள்ளதனை உணரமுடிகின்றது. பெரும்பாலும் இயற்பெயர்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கக் காணலாம். சொல்லில் விகுதிகள், வேற்றுமை உருபுகள், இடைச்சொற்கள்

போல்வன தமிழ் எழுத்துக்களிலும் அவற்றை ஏற்ற நிலைமொழி அல்லது வருமொழிகள் கிரந்த எழுத்துக்களிலும் எழுதப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் காட்டலாம்.

1. பட்டன் என்னும் சொல்லின் பகரம் மட்டும் கிரந்த எழுத்து. "சந்தோக சூத்திரத்து பாடகத்து நாராயண பட்டன் பங்கொன்றும்" (S.I.I. Vol. II. பக்கம் 527).

2. "தேவர் பண்டாரத்தில் பெறச்ச நீரா தித்தவற்கல்லில் வெட்டித்து" (S.I.I. Vol. II பக்307. விக்ரம சோழன் கல்வெட்டு)

3. ஸ்ரீ ராஜராஜதேவர் - எல்லா இடங்களிலும் கிரந்த எழுத்திலுள்ளது.

4. "...இரண்டு தொரை உசரத்து இவள் எழுந்தருளியிருக்கும் பீடம் ஒன்று" (S.I.I. Vol. II. Page 401. இராஜராஜன்).

5. சபையார் (S.I.I. Vol. II பக் 330 - இராசராசன்)

6. காசியபன் எடுத்த பாதப் பிச்சனான உருத்திரசி வனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (S.I.I. Vol. II. பக் 255)

8. .... உடையர் கோயிலில் பரி வாராலயத்துப் பிள்ளையார் கண பதியார்க்கு ஸ்ரீராஜராஜதேவர் பணிமகன் (மேலது பக். 412).

9. ..... இவனே கோப்பரகே சரிபந்மரான ஸ்ரீ ராஜேந்திர சோள தேவர்க்கு யாண்டு மூன்றாவது (மேலது. பக்410)

10. பெண்டிர் பண்டாரமும் கைக்கொண்டு விஜயாபிசேகம் பண்ணி, வீர சிம்காச நத்து வீற்றிருந்தருளிய கொப்பர கெ சரிபன்ம ரான உடையார் ஸ்ரீ ராஜேந்திரதேவற்கு யாண்டு. (மேலது. பக். 306)

இவற்றையும், இவைபோன்றமையும் பல்வேறு கல்வெட்டுத் தொடர்களையும் நோக்கும்போது கல்வெட்டுத் தமிழின் கலப்பு நடைப் போக்கினை நன்குணரலாம். இப்போக்கு, தமிழகத்தின் எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் அமைந்துள்ள எல்லா அரசர்களின் கல்வெட்டுக்களிலும் நிலவுவதனைக் காணலாம். இக்காலங்களில்

தமிழகத்தெழுந்த வடமொழிக் கல்வெட்டுக்களில் இத்தகைய கலப்பு நடை அமையவில்லை என்று கூறுகின்றனர்.

மாமன்னன் இராசராசன் காலம், கடைச்சங்ககாலத்திற்கு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்குப் பிற்பட்டதாகும் (கி.பி. 985-1014). இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தின் அரசியல், சமயம் போன்றவற்றில் பல வேறுபாடுகள் தோன்றித் தம் செல்வாக்கையும் முத்திரையினையும் நிலைபெறுத்தியுள்ளன. சங்ககாலத்தில் அரசாண்ட சேர சோழ பாண்டிய மன்னர்கள், பரிமேலழகர் கூறுமாறு 'படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவரும்' (குறள் 955 பரி. உரை) தமிழ்க்குடியினராவர். வைதிகச் செல்வாக்கு அக்காலத்திலேயே தமிழகத்தில் இடம்பெற்றிருந்தாலும் தமிழரசர்கள் தம்மை வைதிக நெறியிலமையும் வருணப்பாகுபாட்டில் தம்மை இணைத்துக் கொண்டனர் என்று கூறுவதற்கில்லை. வானவன், வளவன், மாறன் என்றிங்ஙனம் தமிழ்ப் பெயர்களாலேயே அறியப்பட்டனர். ஆயிரம் ஆண்டுக்கால மாற்றத்தில், வர்மர்கள் ஆகிவிட்டதனைக் காணமுடிகின்றது. மாறவர்மன், சடையவர்மன், இராசராசவர்மன், ரவிவர்மன் என்றிங்ஙனம் வர்மர்களாக அறியப்படுகின்றனர். வர்மன் என்பதற்கு க்ஷத்திரியர்களின் பட்டப்பெயர் (Title of Ksttriyas) எனச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி விளக்கம் தந்துள்ளது. வர்மன், 'பர்பன்' என்றும் பன்மன் என்றும் வர்மர், பர்மர் என்றும் திரிவது இயல்பே. இடைக்காலச் சேர சோழ பாண்டியர் தம் பெயரளவில் தாமும் தாம் சத்திரிய மரபினர் என்பதனை ஏற்றுக் கொண்டவராயினர். அவர்கள்தம் இயற்பெயர்களும் சுந்தரபாண்டியன், பராக்ரம பாண்டியன், இராசேந்திரன், குலோத்துங்கன் என்றமையலாயின. அக்காலத் தமிழ்க் கல்வெட்டுக்களில் 'ஸ்வஸ்தி ஸ்ரீ' போன்ற மங்கல வாசகம், வடமொழிச் சுலோகம், கிரந்தங்கலந்த மணிப்பிரவாள நடை மிக்க அளவில் கலப்புற்றதன் காரணம் அறிய சிரமப்பட வேண்டியதில்லை.

இராசராசன், மெய்க்கீர்த்தியில் மங்கல வாசகத்தையடுத்த ஆசிரிய நடையில் அமைந்த மெய்க்கீர்த்திப் பகுதியின் முதல் மூன்று அடிகள் வருமாறு :

*"திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்கை பாடியும் "*

இவ்வேந்தன் கல்வெட்டுக்கள் இவனாட்சிக்குட்பட்டிருந்த பகுதிகள் பலவற்றிலும் இம்மெய்க்கீர்த்தியினைக் காணலாம்.

மாமல்லக் கல்வெட்டில், "நிலச்செல்வி(யு) தெனக்கேயுரிமை" என்றும், "கா(ந்) தெளூர்சாலை" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

தஞ்சைக் கல்வெட்டொன்றில், "தனக்(ெ)கயுரிமை பூண்டமை மனக் கெ(ா)ள்க் கா தளுர்ச்சாலை" என்றிருப்பதனைப் பிழைபடாமல் படித்துவிடக்கூடும். நன்கறிந்த பகுதியிலேயே இவ்வாறு மாறுபாடு காணப்பட்டால் என்னென்பது? தொழுதக என்பது தொழுதெழ என்றும் வேங்கை நாடு குடமலை நாடு ஆகியன வேங்கை ஞாடு, குடமலை ஞாடு என்றும் சிலவிடங்களில் காணப்படுகின்றன.

பண்டு அரசாணைகள் மன்னன் நேரே வாய்மொழியாகக் கூறக் கேட்ட அதிகாரிகள் உரிய முறையில் வெளியிடப்பட்டனவாக அல்லது உரிய தலைமை அதிகாரிகளால் உருவாக்கப்பெற்று மன்னனது ஒப்புதல் பெற்றுப் பின்னர் உரிய அதிகாரிகளால் வெளியிடப் பட்டனவாக அமையும். ஓலையில் அவ்வாறு வரையப் பெற்ற அரசாணை, அதன் இன்றியமையாமையினைக் கருதிச் செம்பிலும் கல்லிலும் பொறித்துக்கொள்ளுமாறு அனுமதி வழங்கப்பெற்று உரிய அதிகாரிகளால் பொறிக்கப்பெறும். செப்பேடுகளாயின் அவற்றை ஏடுபோல ஒரு வளையத்தில் கோக்கப்பெற்று அரச முத்திரையோடு வழங்கப்பெறும். உரியவர்கள் அவற்றைப் பேணிக் கொள்வர்.

மாமன்னன் இராசராசனது வாய்மொழிய அமைந்த ஓர் ஆணை சிறப்பாகத் தஞ்சைப் பெரிய கோயிலின் விமான வடபுற மேற்புறச் சுவர்களில் உள்ளது. அது இராசராசன் தான் எழுப்பிய பெரிய கோயிற்பெருமானுக்கு அளித்த பெருங்கொடைப் பொருளின் விபரங்கள் கொண்டுள்ளது. அந்த ஆணை வருமாறு :

“நாங் குடுத்தனவும், அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றுங் குடுத்தார் குடுத்தனவும் ஸ்ரீ விமானத்தில் கல்லிலே வெட்டுக என்று திருவாய்மொழிஞ் சருள வெட்டிந.”

இந்த ஆணையில் ‘கல்லிலே வெட்டுக’ என்பது வரையிலும் மன்னனது நேர்கூற்றாகவும், எஞ்சிய பகுதி, அதனை ஏற்று வெட்ட ஏற்பாடு செய்த உயர் அதிகாரியின் கூற்றாகவும் உள்ளன. அதிகாரி கூற்றுப் பகுதியில் ‘மொழிந்தருள’ என்றும் ‘வெட்டின’ என்றும் இருக்கவேண்டியவை மொழிஞ்சருள என்றும் வெட்டிந என்றும் உள்ளன. தமிழ் பயின்றார் நோக்கில், இத்தொடர்களில் இடம்பெற்ற ஞகர நகரங்கள் பிழையான எழுத்துக்களாகும். அரசனது நேர் கூற்றுப் பகுதியில் இடம்பெறும் நான்கு ‘குடுத்தநவும்’ என்பதில் இடம்பெறும் நகரங்களும். ஸ்ரீ விமாநம் என்பதில் உள்ள நகரமும் தமிழ்நோக்கில் தவறான எழுத்துக்களாகும். விமாநம் பிறமொழிச் சொல்லாதலின் அவ்வாறு எழுத்தப்பட்டது என்று கூறக்கூடுமாயின், குடுத்தநவும் என்பதில் நகரம் இடம் பெறுமாறு எங்ஙனம்? அச்சொல்லின் சரியான பகுதி ‘கொடு’ என்பதாகும். ஆனால் மிகப்பலவாய கல்வெட்டுக்களில் 'குடு' என்று திரிந்த வடிவமே இடம் பெற்றுள்ளது. ”கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான்’ என்னும் தொடர் மன்னன் சிறப்பினைப் பேசும் தொடர்களுள் ஒன்று, அதனைப் பல கல்வெட்டுக்களில் காணலாம். இத்தொடரிலும் “கொடாதான்” என்பதனைக் “குடாதான்” என்று பொறிக்கப்பட்ட இடத்தையும் காணமுடிகின்றது. (S.I.I. Vol. I. பக் 110) ‘குடுத்தேன்’, (S.I.I. Vol. 1. பக்77) குடுத்த அளவுக்கு (மேலது. பக் 88) இப்படிப் பலவிடங்களில் காணக்கூடும். இக்காலத்திலும் படித்தவர், படிக்காதவர் எனும் வேறுபாடின்றி ‘குடு’ என்று வழங்கும் வழக்கு நிலவக் காணலாம்.

தொல்காப்பியர் தனிச் சொற்களை எடுத்துக்கொண்டு அவற்றிற்கு இலக்கணம் அல்லது விளக்கம் கூறியுள்ளது சில சொற்களுக்கேயாகும். அவற்றுள் ஈ.’தா’. கொடு என்னும் மூன்று சொற்களும் ஏறத்தாழ ஒரே பொருளைத் தருவனவாம். ஒருவனிடமுள்ள ஒருபொருள்

இன்னொருவனை அடைவிக்கும் செயலையே அம்மூன்று சொற்களும் குறிக்கின்றன. கொடுத்தும் கொண்டும் விளங்கும் அவர்களிடையே நிலவும் நிலைமை வேறுபாட்டினை இச்சொற்கள் காட்டுகின்றன. ‘ஈ’ என்னும் சொல் பொருள் பெறுபவனின் தாழ்ந்த நிலையையும், ‘தா’ என்னும் சொல் இருவரிடையே நிலவும் ஒத்த நிலையையும், கொடு என்னும் சொல் அளிப்பவனின் உயர்ந்த நிலையையும் குறிக்கும். (தொல். 927-930).

‘ஈயென இரத்தல் இழிதன்று அதனெதிர்
ஈயேனென்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று ’

என்னும் புறநானூற்றுச் செய்யுட் பகுதியாலும், ‘பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி’ எனும் சங்க அரசப் பெயராலும் உணரலாம். பொருள் வேற்றுமை பாராது, குடுத்தனவும் என்று பொதுமக்கள் வழங்கும் திரிபு வடிவத்தை மாமன்னன் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. குடுத்தனவும் என்பது இராசராசன் பயன்படுத்திய சொல்லாயினும் அதனை எழுத்துருவில் குடுத்தநவும் என்று எழுதச் செய்தது மன்னன் செயலாக இருத்தல் இயலாது. திருமந்திர ஓலை நாயகம் முதல் பல அதிகாரிகள் முதல் கல்லில் பொறித்தவர் வரை இடைப்பட்டவர்களில் எவரும் இதனைக் கவனியாது விடுத்தது ஏன்? இந்த வடிவத்தையே மற்றவர் பலரும் பயன்படுத்தியுள்ளனரே, அஃதேன்? அதனையும் இதுபோல அமைந்த பிற சொல்லாட்சிகளையும், பிழைகளையும் எண்ணுங்கால், வழக்கில் காலந்தோறும் தமிழ் வழங்கிவந்த நிலைமை தெரியும்.

தொடரும்

அன்பு அச்சகம், மதுரை-1. ©741116